# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை



## *2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2021.03.19 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*



# தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

புத்தளம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அசோக்க பிரியந்த அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *17.00*** | **தபாற் செலவு : ரூபா *15.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்)

## தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

“தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சபாவ ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

***1***. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவவைக் கூட்டிணைத்தல்

***2***. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவவின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கு அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ‘‘கூட்டுத்தாபனம்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) “தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி

தஹம் சபாவ'' என்னும் பெயரின் கீழும், மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருத்தலும் வேண்டுமென்பதோடு, அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் , பயன்படுத்தவும், அது அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3**. (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) பௌத்த நெறியுடனான பரிநிர்வாணத்தை நோக்கமாகக் கொண்ட சங்கல்ப பூஜைக்கு முன்னுரிமை அளித்துச் செயற்படும் பொது நிலையினரையும் துறவிகளையும் உருவாக்கல்;

(ஆ) சமய அறிவு கருதி அறநூல்களை வெளியிடுதல் மற்றும் புதியோர்களுக்காக அன்றாடம் சீலம், சாந்தி, மெய்யறிவை வளர்த்தல், அறநெறி கலந்துரையாடல்களை நடாத்துதல் மற்றும் தம்மபோதனைகளை செவிமடுப்பதற்கு வாய்ப் பேற்படுத்திக்கொடுத்தல்;

(இ) அறநெறிச் சபைகளுக்குச் சொந்தமான நிறுவனங்களில் நான்கு வகையினரின் ஒழுக்கநெறி கருதி தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த மகாதேரரினால் போதிக்கப்பட்ட மத அலுவல்களை பாதுகாத்து நடைமுறைப்படுத்தல்;

(ஈ) தர்மநெறி புரிதலை விரும்புகின்ற நான்கு வகை தரப்பினரினதும் புரிதலை மேம்படுத்துவதற்கு உறுதுணை புரிகின்ற அற நூல்களை வருடாந்தம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் தர்மத்தினதும் ஒழுக்கத்

தினதும் ஆழமான பொருளை உணர்ந்த மூத்த பிக்குமார்களினால் புதிதாக துறவு நிலை அடைந்தவர்களுக்கும் பங்களிப்பு தரப்பினருக்கும் புரிதலை வழங்கும் பொருட்டு விளக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்;

(உ) சிறு பராயத்தில் உள்ள துறவிகளுக்கு தரமான கல்வியை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்தல்;

(ஊ) ஸ்ரீ சம்போதி ஆரண்ய ஆசிரமங்களுடன் இணைந்ததாக உள்ள சீலமாதா ஆசிரமங்கள் மற்றும் அவற்றில் தங்கியுள்ள பிக்குணிகளுக்கு தர்ம ஞானத்தை போதித்தல்;

(எ) தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவவுக்குச் சொந்தமான ஸ்ரீ சம்போதி ஆரண்ய ஆசிரமங்களினதும் நான்கு வகை தரப்பினரினதும் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு தேவையான நேயமிக்கதும் ஏற்புடையதுமான இதர பணிகளை மேற்கொள்ளுதல்;

(ஏ) தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவவினால் உருவாக்கி நிறைவேற்றப்பட்டுள்ள அமைப்பு விதிகளுக்கு முரண்படாத வகையில் ஒழுக நடவடிக்கை எடுத்தல்;

(ஐ) தர்ம ஒழுக்கங்கள் பற்றிய புரிந்துணர்வுடன் ஐம்பாவங்களிலிருந்தும் விலகி தானமளிப்பதன் நன்மை தீமைகளை அறிந்து கொள்கை ரீதியான தானத்திற்கு முக்கியத்துவமளித்து சுவர்க்கத்தை நோக்கி பக்தியுடன் வாழும் துறவற மற்றும் இல்லற பக்தர்களை உருவாக்கல். அது தொடர்பில் மாதாந்த நான்கு போயா தினங்களிலும் சீல மற்றும் தியான நிகழ்ச்சிகளை நடாத்தல், தியான வாரங்களை நடாத்தல் மற்றும் புரிந்துணர்வை விருத்தி செய்து பிக்குகளுக்கிடையேயும் மற்றும் துறவற மற்றும் இல்லற நிலையுடையவர்களுக்கிடையே தர்ம கருத்தாய்வு

களை நடாத்தலின் ஊடாக உளவிருத்தியை ஏற்படுத்தி பாவங்களை பாதகங்களாகப் புரிந்து நடக்கும் அணியை உருவாக்கல்;

(ஒ) தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த மகாதேரரினால் போதிக்கப்பட்ட மத அலுவல்களை கருத்திற்கொண்டு தர்ம ஒழுக்கங்களை உள்ளடக்கிய அறநெறி நூல்கள், உரைகள், ஒளிநாடாக்கள், வீடியோ நாடாக்களைப் பாதுகாத்து அடிக்கடி பயன்படுத்தக்கூடியவாறு உருவாக்கி நடைமுறைப்படுத்தல் அத்துடன் தர்ம ஒழுக்கம் தொடர்பாக சமய கலந்துரையாடல்கள் மூலம் தெளிவடைந்த மூத்த பிக்குமார்களினால் புதிதாக துறவு நிலை அடைந்தவர்களுக்கும் தெளிவுபடுத்தல். அதன்மூலம் சமய புரிந்துணர்வு மற்றும் ஒழுக்கமுள்ள பிக்குமார்களை உருவாக்குதல்;

(ஓ) சிறுபராயத்தில் உள்ள துறவிகளுக்கு தரமான கல்வியை வழங்குவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்து தரமான அறிவுடன் மெருகூட்டப்படும் தியானம் மாதாந்த போயா தினத்தில் சீலம், தியானம், அறநெறிப் போதனை, அறநெறி கலந்துரையாடல்களை நடாத்துதல் மற்றும் தம்மபோதனைகளை, தர்ம நெறி புரிதலை விரும்புகின்ற நான்கு வகை தரப்பினரினதும் புரிதலை மேம்படுத்துவதற்கு பௌத்த நெறிகள் அடிப்படையில் அட்டாங்க தர்மமுள்ள சமூகத்தை உருவாக்கல்;

(ஔ) தர்மநெறி புரிந்துணர்வுடன் ஏதாவது பிரதேசத்தில் பங்களிப்பு வழங்க ஒரு குழு அமையப்படுமானால் அப்பிரதேசத்தில் புதிய ஆசிரமங்களை உருவாக்க பங்களிப்பு வழங்கி அதனை விஸ்தரித்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் பதினொரு பேரைக் கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட முகாமைத்துவக்

குழு ஒன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைத்துவக் குழுவானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த நிருவாக சபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப் பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

தஹம் சபாவவின் நிதியம்

**6**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாக இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் முகாமைக் குழுவினால் தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*தஹம் சபாவவின் அசையும் அசையாத சொத்துக்கள்*

**7**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுமுள்ள முழுத்தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

*தஹம் சபாவ கலைக்கப் பட்டதன்மீது எஞ்சியிருக் கின்ற ஆதனம்*

**8**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது:

ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும்.

*கணக்குகளும், கணக்காய்வும்*

**9**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதி ஆண்டு ஒரு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதனால் பெறப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டிலும் ஆகக்குறைந்தது ஒருதடவையாவது பரீட்சிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் வருமானம் மற்றும் செலவினக் கணக்குகள் மற்றும் ஐந்தொகையின் சரியாந்தன்மை முகாமைக் குழுவினால் நியமிக்கப்படும் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் சான்றுறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,

(அ) இலங்கை பட்டயக் கணக்காய்வாளர்கள் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர்;

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

தஹம் சபாவவின் இலச்சினை

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைக் குழுவின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது என்பதுடன் அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

***11***. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்

***12***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்